செ.வெ.எண்-19 நாள்-11.04.2018

# அரியலூர் மாவட்டம், இராங்கியம் கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம் நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் வட்டம், இராங்கியம் கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று (11.04.2018) நடைபெற்றது.

இம்முகாமில், சமூக பாதுகாப்புத்திட்டத்தின்கீழ் 10 பயனாளிகளுக்கு ரூ.1 இலட்சத்து 20 ஆயிரம் மதிப்பில் முதியோர் உதவித்தொகைக்கான காசோலையினையும், 30 பயனாளிகளுக்கு வீட்டுமனைப்பட்டாக்களுக்கான ஆணைகளையும், வேளாண்மைத்துறையின் சார்பில் 2 விவசாயிகளுக்கு ரூ.72 ஆயிரத்து 432 மதிப்பில் 2 மலைத்தூவான் கருவிகளையும், 2 விவசாயிகளுக்கு மண்வள அட்டையினையும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் 3 விவசாயிக்கு ரூ.1 இலட்சத்து 2 ஆயிரத்து 191 மதிப்பில் சொட்டு நீர் பாசனம் மற்றும் மாடித்தோட்டம் காய்கறி தொகுப்புகளையும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 6 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் இலவச பேருந்து பயண அட்டைகளையும் என ஆகமொத்தம் **53 பயனாளிகளுக்கு ரூ.4 இலட்சத்து 44 ஆயிரத்து 623** மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் வழங்கினார்கள்.

**இம்முகாமில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசியதாவது :-**

இராங்கியம் கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாமிற்கு முன்னதாக பொதுமக்களிடமிருந்து **78** கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, இதில் **52** கோரிக்கை மனுக்கள் ஏற்கப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த முகாமில், வேளாண்மைத்துறை, கால்நடைப்பராமரிப்புத்துறை, செய்தித்துறை, தோட்டக்கலைத்துறை, சுகாதாரத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகிய துறைகளின் சார்பாக பொதுமக்களுக்கு திட்ட விளக்கி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது.

இம்மக்கள் தொடர்பு முகாம் 15 நாட்களுக்கு முன்னரே இப்பகுதி மக்களின் கோரிக்கை மனுக்கள் பெற்று, அம்மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, இன்று (11.04.2018) 53 **பயனாளிகளுக்கு ரூ.4 இலட்சத்து 44 ஆயிரத்து 623** மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மக்கள் தொடர்பு முகாம் நடத்தப்படுவதன் நோக்கமே அரசின் சார்பில் பல்துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் மக்கள் நலத்திட்டங்கள் அனைத்துத்தரப்பு மக்களுக்கும் சென்றடைவதற்காக ஏற்படுத்தப்பட்டது. இம்முகாமில், அனைத்துத்துறை அலுவலர்களும் கலந்துகொண்டு, தங்கள் துறை சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்களை விரிவாக எடுத்துரைத்தார்கள்.

எனவே, இத்திட்டங்களில் பயன்பெற விரும்பும் பொதுமக்கள், சம்மந்தப்பட்ட துறைகள் மூலம் முறையாக விண்ணப்பித்து அரசின் நலத்திட்டங்களை பெற்று பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் பேசினார்கள்.

இம்முகாமில், மாவட்ட வருவாய் அலுவலர் சே.தனசேகரன், மண்டல இணை இயக்குநர் (கால்நடைப்பராமரிப்புத்துறை) மரு.எம்.நஸீர், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.வீ.சி.ஹேமசந்த்காந்தி, மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் ஜெயராணி, மாவட்ட துணைப்பதிவாளர் (பொதுவிநியோகத்திட்டம்) கே.கே.செல்வராஜ், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ஆர்.பாலாஜி மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள், ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

உடையார்பாளையம் கோட்டாட்சியர் வே.ஜோதி அனைவரையும் வரவேற்றர். முடிவில், ஆண்டிமடம் வட்டாட்சியர் ராஜமூர்த்தி நன்றி கூறினார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**